பாசுரம் - 23

மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்
சீறிய சிங்கம் அறிவு உற்றுத் தீ விழித்து
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு
போதரும் ஆ போலே நீ பூவைப் பூ வண்ணா உன்
கோயில் நின்று இங்கனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்காசனத்திருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருள் ஏலோ ஓர் எம் பாவாய்

பதங்களின் பொருள்

23-1 **மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்**
மழைக்காலத்தில் மலைக்குகை ஒன்றில் அழகாய் பொருந்தி தூங்குகின்ற

23-2 **சீறிய சிங்கம் அறிவு உற்றுத் தீ விழித்து**
வீர்யம் கொண்ட சிங்கமானது உணர்ந்து தீப்பொறி போன்ற கண்களை விழித்து

23-3 **வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி**
வாசனை மிகுந்த பிடரி மயிர்கள் குதித்து எழ, எல்லாத் திசைகளிலும் தன் உடலை குலுக்கி அசைத்து

23-4 **மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு போதரும் ஆ போலே**
உடலை ஒன்றாக்கி நிமிர்ந்து, கர்ஜனையுடன், ஆயத்தமாகி (get ready) வெளியே வருவது போல்

23-5 **நீ பூவைப் பூ வண்ணா உன்**
காயாம்பூ போன்ற வண்ணத்தை உடையவனே, கண்ணனே

23-6 **கோயில் நின்று இங்கனே போந்தருளிக்**
நீ உன் திருக்கோயிலிருந்து இந்த இடத்திற்கு எழுந்து அருளி

23-7 **கோப்புடைய சீரிய சிங்காசனத்திருந்து**
அழகிய வேலைப்பாடு செய்யப்பட்ட சிறந்த ஸிம்ஹாசனத்தின்

மீ து அமர்ந்து

23-8 **யாம் வந்த காரியம் ஆராய்ந்து அருள்**
வேறு புகல் இன்றி வந்திருக்கும் எங்கள் காரியத்தை அறிந்து கொண்டு விசாரித்து அருள வேண்டும்

அவதாரிகை

23-9 **எங்கள் மேல் நோக்குதியேல், எங்கள் சாபம் இழிந்தேல் என்ற போதும் இரங்காமை தகுமோ?**
எங்களுக்கு உன் திருமேனியை காட்டாயோ? நாங்கள் செய்த பாபங்களை எல்லாம் மன்னித்தேன் என்று திருவாய் மலர மாட்டாயா? என்று அலறிய சிறு பெண்களை இன்னும் காக்க வைக்கக்கூடாது என கண்ணன் எண்ணினான்.

23-10 **பிராட்டியைச் சேர்ந்தவர்கள் படாத பாடு படுவார்களோ?**
நப்பின்னை பிராட்டியைச் சேர்ந்தவர்களை இப்பாடு படும்படி நான் பார்த்துக் கொண்டிருந்தேனே என கண்ணனின் வருத்தம்.

23-11 **நம்பிரான் அடியாரைவிட நப்பினை அடியவர் முக்யமன்றோ?**
பிராட்டி ஸம்பந்தம் பெற்றவர்கள் ஆற்றாது வந்து, சங்கம் இருப்பார்கள் போல் வந்து" என்று சொன்னால் தாங்கக் கூடியவனோ இவன்?

23-12 **அகதிம் என்ற கிடாம்பி ஆச்சானுக்கு, ஆசாரியனடிமை அநாதை இல்லை என அழகர் அருளினார்**
கிடாம்பி ஆச்சான் திருமாலிருஞ்சோலை அழகர் முன்னே அபராத ஸஹஸ்ர பாஜநம் ..அகதிம் சரணாகதம் என்று விண்ணபிக்க, எம்பெருமான் திருவாய் மலர்ந்து, "நம் ராமனுஜனை உடமையாயிருந்து வைத்து கதியற்றவன் என எம்முன்னே சொல்லாதே கிடாய்" என்றது வரலாறு.

23-13 **காக்க வைத்ததிற்கு ஈடாக உங்கள் உள்ளங்களை தெரிவித்தால் அதன்படி செய்கிறேன் என அனுமதிதான் கண்ணன்.**
தான் இத்தனை நேரம் இவர்களை காக்க வைத்தோமே என வருந்தி அதற்கு ஈடாக அவர்கள் வேண்டுகோளை முடித்துத் தருவோம் என கண்ணன் அனுக்ரஹித்தான்.

23-14 **கிடக்கையும், இருக்கையும் கண்டபின் உன் நடக்கையும், அரியணையில் வீற்றிருக்கையும் கண்டு பிறவிப் பயன் பெற வேணும்.**
வேண்டுகோளை செவிமடுத்து உறக்கத்திலிருந்து விழித்து, வீற்றிருந்து ஸேவை கொடுத்தாலும், உன் நடையழகை காணவும், சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் திருக்கோலத்தையும் காண விழையும் எமக்கு அருள்வாய் என்றனர்.

23-15 **மலைக்குகையிலே இருக்கும் சிங்கம் அந்த மலையை விட்டு புறப்பட்டாற் போலே என்றார் வால்மீகியும்.**
பர்வதாதி3வ நிஷ்க்ரம்ய ஸிம்ஹோ கி3ரிகு3ஹாஶய:
கிரிகுஹையிலே இருக்கும் சிங்கம் அம் மளையைவ்ட்டுப் புற்றப்பட்டாற்போலே என்ரு ஆஆதிகவி வால்மீகி பகவானும் எம்பெருமானைப் பற்றி பேசினார்.

அந்யாபதேசம்

23-16 **நின்றதும், கிடந்ததும், இருந்ததும், நடந்ததும் என் கண்கள் மகிழவே என்று எம்பெருமானின் அழகை காட்டுகிறது, இப்பாசுரம்.**
மன்னிக்கிடந்து உறங்கும், மூரி நிமிர்ந்து, முழ்ங்கிப் புறப்பட்டு, சிங்காசனத்தில் இருந்து என்று கண்ணனின் காம்பீர்ய, லாவண்ய லாவகங்களை காட்டுகிறது இந்த பாசுரம்.

23-17 மாரி - **மன்னரும் மற்றவரும் மறைந்து உள்ளிருந்து மகிழும் மழைக் காலம்**
மழைக்காலத்தில் எங்கு பார்த்தாலும் ஜலப்ரவாகம். உலகமே நீரில் மூழ்கி கிடந்தது. அப்போது எல்லா பிராணிகளும், அரசன் உட்பட எல்லா ஜனங்களும் தங்கள் இருப்பிடத்திலேயே ஒதுங்கி கிடந்தனர்.

23-18 **தன் காரியத்தை மறந்து ஸுக்ரிவனும் உள்ளேயே உறங்கி கிடந்தான் அன்றோ.**

23-19 **அக்காலத்திலே மால்யவான் எனும் மலையைப் பற்றி பகவான் ராமபிரானும் கிடந்தார் அன்றோ.**

23-20 **மழைக்காலம் ஆகையாலே மிருகேந்திரனான இவனும் மலைக் குகையிலேயே மண்டி இருந்தான்.**
மழைக் கால ஜல ப்ரவாகத்தால் அனைத்து உயிரும் அதனதன் இருப்பிடத்திலேயே சுருக்கம். விலங்கின் வேந்தனான நம் சிங்கமும் அரசன் அரண்மனையிலேயே கிடப்பது போலே தன் குகையிலேயே கிடந்தான்

23-21 **இணைப்பிற்கும் இன்பத்திற்கும் உகந்த காலமாய் இருக்க, யாம் மட்டும் உன் பிணைப்பின்றி துன்பத்துடன் அலற்றுவதேன்?**
மழைக்காலம் என்பது கூடி அநுபவிக்கும் காலம். அப்படியிருக்க, சிறு பெண்களான நாங்கள் மட்டும் கண்ணா உன்னைப் பிருந்து தனித்து வாடுவதேன்? என வருந்தினர்.

23-22 **பிரிந்தவர் கூடுவதும், கூடியவர் அநுபவிப்பதுமாய் இருக்க யாம் மட்டும் கண்ணணை பிரிந்து கலங்குவது ஏன்?**
பிரிந்தார் கொடுமை குழறு தண்பூம் காலம்
நம்மாழ்வார், திருவிருத்தம் 7
என்று ஆழ்வார் பிரிந்தவர்கள் வருத்தம் மிகுதியுடன் கடத்தும் காலம் என்றார். ஏன் என்றால் மழைக்காலம் ஆனதால் பிரயாண வசதிகள் சுலபமில்லை. அது போலே கூடி இருப்பவர்களும் அகல முடியாதபடி சேர்ந்தே இருக்கும் நிலை. கண்ணா! உன்னுடன் நாங்கள் சேர்ந்திருக்க அருள மாட்டாயா? என வேண்டினர்.

23-23 **கண்ணனும் நப்பின்னையும் ஒரே கட்டிலிலே கிடக்கும் காலம்**
எங்களில் ஒருத்தி என நினைத்திருந்தோம் இந்த நப்பின்னையை.

ஆனால் அவள் மட்டும் உள்ளே தனித்து உன்னிடம் போகம் கொண்டாடுகிறாள். உன்னுடன் ஒரே கட்டிலிலே கிடக்கிறாள். நாங்கள் மட்டும் உன்னிஅடைய முடியாதபடி என்ன பாபம் செய்தோம்? என கோவித்தனர்.

23-24 **மலைக் குகையே பற்றிகிடக்கும் சிங்கம் போல்** யசோதை இளஞ் சிங்கமும் நப்பின்னை கொங்கை மேல் வைத்துக் கிடந்த மலர் மார்பன்.
சரி அந்த நப்பின்னை உன்னை அனுபவித்து போகட்டும். எங்களுக்கு சின்னதாக ஒரு பங்கு தரக்கூடாதே. தானே எல்லாம் பெற வேண்டும் என்று உன்னை நகர முடியாதபடி அணைத்து கட்டி போட்டு இருக்கிறாளோ? என அலறினர்.

23-25 **நீளா துங்க ஸ்தந கிரி என நப்பின்னையின் மார்பிலே படுத்து ஸ்பர்ச சுகத்திலே மயங்கி கிடந்தாயோ?**
அவள்தான் சுயநலவாதியாக இருக்கட்டும். கண்ணா, உனக்கு தெரியாதா? நாங்கள் எப்படி உன்மேல் உயிரையே வைத்திருக்கிறோம் என்று. அதை துளிக்கூட சிந்திக்காமல், நீயும் அவள் சொக்குப்பொடிக்கு மயங்கி கிடக்கிறாயே? என வெறுவினர்.

23-26 உறங்குவான் போல் யோகு செய்த பிரான் எம் கண்ணனே **ஆயினும் அவன் கிடந்ததோர் கிடக்கை காண வேண்டினோமே**
கண்ணா உனக்கு உறக்கம்தான் முக்யம் என்றால், சரி போகட்டும். சிறு பெண்களாகிய எங்களுக்கு கதவைத் திறந்து விட்டு பின் நீபோய் படுத்துக் கொள்ளேன். நன்றாக நாள் பூராகவும் உறங்கேன்! நாங்கள் உன் கிடக்கையை கண்டு மகிழ்ந்து அநுபவிக்கலாம் என்று கெஞ்சினர்.

23-27 **உறங்கையிலும் மற்ற ஒன்றையும் அணுக விடாத இந்த சிங்கம்,** சீரிய சிங்கம்
ஏம்பெருமானுக்கு உறக்கம் ஏது? வேதங்கள் அபஹதபாப்மா என்று இவனை விவரிக்கும்போது இவனுக்கு தூக்கம் இல்லை என்றது. உஅறங்கும் பாவனையில் இருப்பவன்.

23-28 **உறங்கையிலும் எதிரிகளை தவிக்கச் செய்யும் சீரிய சிங்கம் இவன்**

உறங்கும் பாவனைசெய்தாலும் இவன் ஸத்யஸந்த்ன ஆகையாலே. வல்லானை மாற்றானை கொன்று என்று பகைவர்களை ஸங்கல்பத்தாலே அழிப்பவன்.

23-29 **யசோதை இளஞ்சிங்கம், சிற்றாயர் சிங்கம், ம்ருகேந்திரன் என்றாலும் இவன் நம் சிங்கப்பிரானே.**

இவன் பயப்படும்படி நரம் கலந்த சிங்மோ என நடுங்க வேண்டாம். ஸாதுக்களை ரக்ஷிக்கவும் தர்மத்தை நிலை நாட்டவுமே இங்கே வந்து படுதுள்ளான். இவன் நம் பெருமான் ஆயிற்றே.

23-30 **தன்னை எழுப்ப வேறு ஒன்று வேண்டாது தானே எழும் அறிவுற்றவன்**

இவன் தூக்கம் பாவனை ஆகையாலே இவனை எழுப்ப ஒரு ஸாதனமும் அவசியமில்லை.

23-31 **அடியவரின் அவக்குரலை கேட்குங்கால் தானே அறிவுற்று விழித்து எழும் அரியுருவம் இவனே**

பாட்டு கேட்குமிடம் ப்ரமபதம். கூப்பிடு கேட்குமிடம் பாற்கடல் என்கிறாற்போலே, ஒரு வேளை பாற்கடலில் கிடந்தால் அடியவர் அவக்குரல் காதில் விழாமல் போகுமோ? இல்லை, காதில் விழுந்தாலும் உடனே வரமுடியாமல் போகுமோ? என கருணையால் இங்கே வந்து கிடக்கிறான்.

23-32 **நெருப்புப்பொறி கக்க, பூங்கோதையாள் வெருவ, வானோர் கலங்கி ஓட என்கிறபடி தீ விழிக்கும் சீரிய சிங்கம்**

ஹேகிருஷ்ணா! துவாரகாவஸீந் என்ர குரல் கேட்டால் போதும். தன்னடியார் திறத்தகத்து தாமரையாள் ஆகிலும் சித்கு உரைக்குமேல் என்கிறபடி இவனித் தடுக்க யாராலும் முடியாது. கண்களில் நெருப்பு பொறி பறக்க, இணைபிரியாதப்

பிராட்டியே புரியாமல் விழிக்க, அருகில் இருந்த அனைவரும் பயந்து நடுங்கும்படியான பகைவரை வதம் செய்ய கிளம்புகிறான்.

23-33 **அடியவருக்கு அருளும் கண்கள், எதிரிகளை எரிக்கும் கண்களை உடைய இவன்** க்ருபா கபட கேஸரி

ஹா, இவன் மாயாஜால தந்திரக்காரன். ஒரு கண் சூரியன் போலே. ஒரு கண் சந்திரன் போலே. அடியவருக்கு குளிமையும், பகைவருக்கு வெப்பபும் கக்கும்படியான் கண்களை உடையவன் அன்றோ!

23-34 **இவனுடைய கோவமும் இப்பெண்களுக்கு ஸாதகமே**

இவனை அண்டியவர்களுக்கு இவனிடத்தில் ஏன் பயம்? என்னை சரண் அடைந்தவர்களை காக்கிறேன் என்று விரதம் பூண்டவனாயிற்றே. இவனுடைய கோவம் பகிவர்களை அழிக்கும். அது நமக்கு லாபம் என்று இருப்பர் அடியவர்.

23-35 **திருமாலுக்கு திருவாயுதங்கள் ஆபரணங்கள் போலே.**
அழகியான்தானே அரி உருவமான**இவனுக்கு கோவமும் அழகே.**

அழகில் மிக்கவன் இவன் ஆகையால் கோவமும் அழகே. எப்படி ஆயுதங்களும் ஆபரணங்களாக எம்பெருமானுக்கு விளங்குமோ அதுபோலே.

23-36 **நரங்கலந்த சிங்கமாய்க் கீண்ட திருவனாகில் கோவத்திலும்** ஸ்ரீமாந்**.**

எம்பெருமான் நாரஸிம்ஹவபு: ஸ்ரீமாந் என்பதால் பிராட்டியை எப்போதும் பிரியாதவன்

23-37 ஸர்வ கந்த: ஸர்வ ரஸ: **இவனுடைய முடியும் மணமானது.**

வேதம் எம்பெருமானை ஸர்வ விதமான வாசனையும், ருசியையும் தன்னுள் கொண்டவன் என்றது. எனவே அவனுடைய பிடரியும் நறுமணமானது.

23-38 ஹிரண்யகேஸ: ஹிரண்யமச்ரு **இவனுடய கேஸமும் பொன் மயமானது.**
ஹிரண்யமச்ரு: ஹிரண்ய கேச: ஆப்ரணகாத் ஸர்வஏவ ஸுவர்ண: தஸ்யா யதா கப்யாஸம் புண்டரீகமேவ மஷிணி
சாந்தோக்ய உபனிஷத்
உபனிஷத் எம்பெருமானின் கேஸமும், மீசையும் பொன் மயமானது என்று உயர்த்தி சொன்னது. எப்படி உலோகங்களில் பொன் உயர்ந்ததோ அது போலே.

23-39 **துயிலிருந்து விழித்து நாற்புறமும் தன்னை அசைத்துக் கொள்வது** எப்பாடும் பேர்ந்து உதறி
தூக்கத்தில் இருந்து விழித்து நாற்புறமும் நோக்கி, எழுந்து தன் உடலை அசைத்துக் கொள்வது.

23-40 **உறங்கிக்கிடந்த அவயங்களை ஆட்டி விழித்துக் கொள்வது** உதறி.
தூக்கத்திலிருந்து விழித்தவன் தன் அவயங்களை எல்லாம் நீட்டி (சோம்பல் முறிப்பது போல்) உடலை உலுக்கிக் கொள்வது போலே. சாதரணமான கிராமசிங்கமே (நாய்) செய்யக் கூடியது.

23-41 **உறுப்புகளுக்கு உடலான திருமேனியையும் ஒன்றாக நிமிர்த்தி எழுந்திருப்பது** மூரி நிமிர்ந்து
உறுப்புக்களை ஒன்றாக்கி கடினமான உடற்பயிற்சி போலே உடலை நிமிர்த்துவது.

23-42 **தலைவனின் லக்ஷணம் வீர முழக்கம்** முழங்கி
சிங்கத்தின் தனிப் பெருமை அதன் கர்ஜனை. அப்ப்டி அது கர்ஜிக்கும்போது தான் தலைவ ன்என்பதை அறிவிக்கிறது.

23-43 **அடியவரின் அலறல் கேட்டு அரியின் சிம்மநாதம் -** அறிவுற்று முழங்கி
சிறிய பெண்கள் கண்ணனின் திருமாளிகை முன் நின்று

எம்பெருமானே எங்களின் கண்ணுக்கும், காதுக்கும், ஆத்மாவிற்கும் விருந்தளிப்பாய் என வேண்டினர். உன் சிம்ம கர்ஜனை காட்டி இதோ வந்தேன் என சொல்ல மாட்டாயா? என்பது போலே.

23-44 **வந்தாய் போல வாராதாய், வாராதாய் போல வருவாயே என** புறப்பட்டு போதருமாபோலே

மலைக் குகையிலிருந்து சிம்மம் புறப்பட்டாற்போலே கண்ணா நீயும் புறப்பட வேண்டும். ஆனால் நீ இங்கே இருக்கிறாய் அங்கே இல்லை என்ப்தே கிடையாது. உள்ளே இருக்கிறாய் என நினைத்திருக்கும்போதே நீ எங்களுக்கு அருகில் வந்து உன் அநுப்வத்தை தர மாட்டாயா?

23-45 **திருமேனி சிம்மமானாலும், உன் திருவுள்ளம் பூவானதே -** பூவைப் பூ வண்ணா

வேதம் எம்பெருமானின் கேஸமும், மீசையும் பொன் மயமானது என்று உயர்த்தி சொன்னது. எப்படி உலோகங்களில் பொன் உயர்ந்ததோ அது போலே.

23-46 **உன் ஸங்கல்பம், சிம்மம் போல் காம்பீர்யமும், தலைமையும், மேன்மையுமானது. உன் திருமேனி ஸௌந்த்ர்ய லாவண்யங்களோ பூவைப்போல் நிறமும், அழகும், குளிமையுமானது.**

வேதம் எம்பெருமானின் கேஸமும், மீசையும் பொன் மயமானது என்று உயர்த்தி சொன்னது. எப்படி உலோகங்களில் பொன் உயர்ந்ததோ அது போலே.

23-47 **ஒத்தார் மிக்கார் இல்லாத உன்னை, சிம்மத்திற்கும், பூவிற்கும் ஒப்பாக சொன்னது அல்பமான அறிவு அறிந்தது அவ்வளவே.**

எம்பெருமானுக்கு ஒத்தவையோ அல்லது உயர்ந்தவையோ என்று சொல்லும்படி ஒரு பொருளும் இல்லை. ஏதோ சிம்மம், புஷ்பம் என்று உபமானம் காட்டியது, அறிவில்லாத நம் போன்ற மக்களுக்கு ஒரு அளவாவது தெரிய வேண்டும் என்பதற்காக.

23-48 **உன் நடையழகை காண வேண்டி வந்ததாலே நீ போதருமாப் போலே வருவாய்**

வேதம் எம்பெருமானின் கேஸமும், மீசையும் பொன் மயமானது என்று உயர்த்தி சொன்னது. எப்படி உலோகங்களில் பொன் உயர்ந்ததோ அது போலே எம்பெருமானின் ஸகல அவயங்களும் முடி உட்பட உயர்ந்தது.

23-49 **கிடந்ததோர் கிடக்கை கண்ட எமக்கு மயக்குகின்ற நடையழகையும் சீரிய சிம்மாசனத்தில் அமர்ந்த அழகையும் காட்டாயோ**

வேதம் எம்பெருமானின் கேஸமும், மீசையும் பொன் மயமானது என்று உயர்த்தி சொன்னது. எப்படி உலோகங்களில் பொன் உயர்ந்ததோ அது போலே.

23-50 **அழகு வெள்ளத்திறகு ஓர் அணையிட்டாற்போல் இருக்கும் இம்மாளிகையை துறந்து, அறியாப் பெண்களாகிய எமக்கு, பூவைப் பூ வண்ணா உன் கோயில் நின்று காட்சி தர வேண்டும்**

கண்ணா, நீ உன் மாளிகையில் படுத்துகிடப்பது உன் அழகு வெள்ளத்ததைஅணை போடுவது போல் உள்ளது. அதிலிருந்து நீ கிளம்பி வந்து இந்த அரியணையில் அமர்ந்து எல்லா மக்களும் ஆநந்தமாக அனுபவிக்கும்படி காட்சி தருவது சிறஎத்து அல்லவா.

23-51 **உன் திருமாளிகையும் உன் தகப்பன் திருமாளிகையும் ஒன்றேயென உன் கோயில் நின்று போந்தருளி**

23-52 **பரமபதத்தில் ஜீவனும் பரமனும் ஒன்றாய் அநுபவிக்கும் சொத்து போலே, நந்தகோபன் கோயில் உன் திருக்கோயில்**

கீழே நாயகனாய் பாட்டில் நந்தகோபன் கோயில் எனறது. இங்கே உன் திருக்கோயில் என்றதும் பரமபத்திற்கு சாம்யமாய் ஆயர்பாடியில் எம்பெருமான் சொத்தும் ஜீவனுக்கு உபலக்ஷணமான நந்த கோபன் சொத்தும் ஒன்றே.

23-53 **கிடக்கையும், நடக்கையும் கண்டு மகிழ்ந்த எமக்கு,** கோப்புடைய சீரிய சிங்காசனத்தில், **இருக்கையின் அழகை காட்ட வேணும்.**
வேதம் எம்பெருமானின் கேஸமும், மீசையும் பொன் மயமானது என்று உய்ர்த்தி சொன்னது. எப்படி உலோகங்களில் பொன் உயர்ந்ததோ அது போலே.

23-54 கோப்புடைய சிங்காசனத்தில், ஏலாப் பொய்கள் உரைக்கும் மாலாய் பிறந்த நம்பியும் **உரைப்பது உண்மையே.**
ஆண்டாள் நாச்சியர் திருமொழியில் மாலாய் பிறந்த நம்பியை ஏலாப் பொய்கள் உரைப்பான்" என்று கண்ணனை அண்டப் புளுகன் என்றாள்ல். இருப்பினும் அந்த சிங்காசனத்தில் அமர்ந்தால் அந்த கண்ணனும் உண்மையே உரைப்பான்.

23-55 **தர்ம, ஞான, வைராக்ய, ஐச்வர்ய என நாலு காலும், அதற்கு மாறான நாலும் என, எட்டு கால்களான சீரிய சிங்காசனம்.**
பாஞ்சராத்ர சாஸ்திரத்தில் அரியணை எட்டு கால்களை உடையது என்று சொன்னது.

23-56 அபயம் ஸர்வ பூதேப்யோ **என்று கடற்கரையிலும்,** மாசுச: **என்று தேர்த்தட்டிலும் சொன்னாற்போலே இங்கே அரியணையில் அமர்ந்து சொல்ல வேணும்.**
ராமனாய் ஸமுத்திரக்கரையில் அபயம் என்று சரம ஸ்லோகம் சொன்னாய். கிருஷ்ணனாய் தேர்த்தட்டில் நின்று மாசுச: என்றாய். அதுபோலவே இங்கேயும் நீ ஸிம்மாஸனத்தில் எழுந்தருளி அறியாப் பெண்களாகிய எமக்கும் மற்றவருக்கும் நீ திருவாய் மலர்ந்தருள வேணும்.

23-57 தடங்கொள் தாமரைக்கண் விழித்து நீ எழுந்து உன் தாமரை மங்கையும் நீயும் இடங்கொள் மூவுலகும் தொழ இருந்து அருளாய் **என்கிறபடி அமர்ந்து அருள வேண்டும்.**
ஆழ்வாரும் நீ விழித்து, உன்னை திருமகளோடு சேர்ந்து இருக்க எல்லோரும் உன்னை ஸேவிக்க வேண்டும் என்றார் அல்லவா.

23-58 **நீயாக வந்து எமக்கு அருளுவது கிடக்க, உன் பிரிவைத் தாங்காது, ஆற்றாமையாலே யாம் தேடி வந்த போதும், நீ அதை ஆராய்ந்து அருளாதது ஏன்?**

உன்னையே நம்பி கிடக்கும் ஆய்ச்சிகளாகிய எமக்கு, நீயே முந்தி வந்து அநுபவம் தர வேண்டும். அது இல்லை. போகட்டும். உன்னைப் பிரிந்த துக்கம் தாளாமல், நாங்களே வந்து உன்னை வேண்ட, இப்போதாவது எங்கள் வேண்டுகோளை நினைத்து பார்த்து, அதை பூர்த்தி செய்யக் கூடாதா?

23-59 **ஆய்ச்சிகளையும், கோயில் காப்பானையும், தந்தையும், தாயையும், சகோதரனையும், அணைத்திருக்கும் நப்பின்னையும், உன்னையும் எழுப்ப இப்பாடு பட்ட எமக்கு ஆராய்ந்து அருளக் கூடாதா?**

உன்னிடம் சேர்ந்திருக்க எவ்வளவு பாடு ப்ட்டு வந்திருக்கிறோம். முதலில் வாசல் காப்பான். பிறகு உன் தந்தை, தாயார். உன் சகோதரன், உன் பிரியையான நப்பின்னை. எல்லாரையும் கேட்டு கெஞ்சினோம். ஒருத்தரும் முன் வரவில்லை. கண்ணா! நீயே வந்து எமக்கு அருள் செய்யக் கூடாதா?

ஸ்வாபதேசம்

23-60 **அங்கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்கிதியேல் என்றது அநிஷ்ட நிவ்ருத்தியை வேண்டுதல்.**

அங்கண் மாஞாலத்தரசர் என்ற கீழ்ப் பாசுரத்திலே சிறு பெண்கள் எம்பெருமான் கண்ணனின் திருமாளிகை முன் நின்று அவனது கடாக்ஷத்தை வேண்டி பாபங்கள் விலக வேண்டும் என பிரார்த்தினர்.

23-61 **பலன்கள் நிறைவேற தடைகள் கழிய வேணும்.**

புருஷார்த்தங்கள் ஸித்திக்க ப்ரதிபந்தகமான தடைகளை முதலில் ஒழிக்க வேண்டும். தர்ம, அர்த்த, காம, மேக்ஷம் என்கிற நான்கு விதமான புருஷார்த்தங்களுக்கும் தடைகள் உண்டு. அவற்றை அதற்கு தகுந்ததான உபாய நுஷ்டானங்களால் போக்கிக் கொள்ள வேண்டும்.

23-62 **சேதனனுக்கு பரம புருஷார்த்தம் பரிபூர்ண பகவதநுபவம். அதற்கு தடை அவனது பாபங்கள்.**
இங்கே பிரபன்னர்களைப் பற்றி கூறுவதால் அல்பமான ஐச்வர்ய தடையோ, ஆத்மாநுபவ தடையோ பற்றி சொல்லவில்லை. எம்பெருமானை தடையின்றி குறைவில்லாது, நிரந்தரமாக அனுவிக்கும் மோக்ஷ ப்ராப்த்திக்கான தடைகளைச் சொன்னது. அது அநாதி காலமாய் சேர்த்து வைத்திருக்கும் பாபக்குவியல்களைச் சொன்னது.

23-63 **பாபங்கள் தொலைதலே சேதனனின் அநிஷ்ட நிவ்ருத்தி.**
ஸஞ்சிதம், ப்ராரப்தம், ஆகாமி என்ற பாவக் குவியல்களை நீக்கினால் ஒழிய மோஷம் ஸித்திக்காது.

23-64 **சரணாகதி ஒன்றே பாபங்களை சுலபமாய் தொலைக்கும்.**
பாபங்கள் விலக பல யோகங்கள் இருந்தாலும் சரணாகதியே எல்லாற்கும் சிறந்தது. சுலபமானது.

23-65 **சரணாகதி என்னும் அறிவு பகவானின் பரத்வத்தை அறிந்த பின்னே தோன்றும்.**
எம்பெருமானிடம் சரண் அடைய அந்த புத்தி ஏற்பட, பகவானின் மேன்மையை அறிய வேண்டும்.
எம்பெருமானின் மேன்மையை முழுவதும் புரிந்து கொள்ள முடியாது. கடல் பெரியது எனத் தெரிந்தால் போதும். அதன் ஆழத்தின் அளவை நிச்சயமாக சொல்ல வேண்டியதில்லை.

23-66 **பகவானின் பரத்வத்தை காட்டுவது ஜகத் காரணத்வம்.**
எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே பர தேவதை என்று எல்லா ப்ரமாணங்களும் ஒரே முகமாக கோஷிக்கின்றன. அந்த எம்பெருமானின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயத்தால்,

23-67 ஜந்மாத் யஸ்ய யத: **என ஜகத் ஜந்மாதி காரண வஸ்துவே பிரம்மம்.**
அஸ்ய - இந்த ஜகத்திற்கு; ஜந்ம ஆதி - தோற்றம், இருப்பு, மறைவு ஆகியவைகள்; யத: - எதனிடமிருந்து ஏற்படுகின்றதோ

அது ப்ரம்மம் என அறிவாய். என்று பிரம்ம சூத்திரமும் ப்ரம்மத்திற்கு லக்ஷணம் ஜகத் காரணத்வம் என்றது.

23-68 **அந்த ஜகத் காரணத்வத்தை காட்டுவது இந்த பாசுரம்.**
எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே ஆதி காரணம். அவன்தான் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ப்ரளயங்களைச் செய்கிறான். அதைக் காட்டுவது இந்த பாசுரம்.

23-69 காரணம் து த்யேய: **என்கிறபடி காரணமான ஸ்ரீமந் நாராயணனனே தியானத்திற்கு உகந்தவன்.**
அதர்வண வேதம், எது உலகத்திற்கு காரணமோ அந்த வஸ்துவே தியானத்திற்கு உரியது என்றது.

23-70 **ப்ரளய காலத்திலே, ஸர்வமும் ஜலமயம் என்பது** மாரி மலை முழைஞ்சில்
ஸ்ருஷ்டிக்கு முன்னே எல்லாம் ஒரே ஜலப்ரவாகமாக இருந்தது. எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் அதில் படுத்துக் கிடந்தான் என்கின்றன வேதங்கள்.

23-71 **அதில் பிராட்டி ஸஹிதமான எம்பெருமான் ஸர்வ சேதநா சேதனங்களை தன்னுள் அடக்கி இருப்பது** மன்னிக் கிடந்து
எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் அந்த ப்ரளய தெசையில், பிராட்டி ஸஹிதமாக் இருந்தான். தன்னுள் ஸக ல சேதநா சேதநங்களை அடக்கிக் கொண்டு தன் வயிற்றில் த்ரிந்து இருந்தான்.

23-72 உறங்கு போல் யோகு செய்த பிரான், **சேதனங்களின் ரக்ஷகத்தை ஆலோசித்து படுத்துக் கிடக்கை** உறங்கி
எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனனுக்கு உறக்கம் கிடையாது. ஆனால் உறக்கம் போலே பாவனை செய்கிறான். அப்போது நாம ரூபம் இல்லாமல் கிடக்கும் சேதநங்களை எல்லாம் உஜ்ஜீவிக்க என்ன செய்வோம் என ஆலோசித்தபடி கிடக்கிறான்.

23-73 **சேதனர்கள் உய்ய, ஸ்ருஷ்டி செய்வது என எல்லையிலா கருணையால் எம்பெருமான் முடிவு செய்வது சீரிய சிங்கம் அறிவுற்று**

சேதனர்கள் நாம ரூபம் இல்லாமல் கிடக்கின்றனர், ப்ரளய காலத்தில். அவை உஜ்ஜீவிக்க வேண்டுமானால் நல்ல காரியங்களை செய்ய வேண்டும். காரியங்களைச் செய்ய இந்திரியங்கள், உடல் இவை வேண்டும். அதனால்தான் எம்பெருமான் தன் கருணையால் கரண களேபரங்களை தர ஸ்ருஷ்டியை ஆரம்பிக்கிறான்.

23-74 **ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி மட்டுமின்றி தானே கீழிறங்கி தீயவர்களை ஒழித்தல் தீவிழித்து**

அவதாரம் என்றால் மேன்மையான ஒருவன் கீழே இறங்குதல். எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே பர தேவதை. அவன் மோஷத்திலிருந்து கீழே இந்த ப்ரகிருதி மண்டலத்தில் இறங்கி பல பல அவதாரங்கள் செய்கிறான்.

23-75 **சாஸ்திர பாணியாய், பரிமள நிகமங்களைக் கொண்டு த்ரம ஸ்தாபனம் செய்தல், வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி**

தர்ம ஸம்ஸ்தாபநாய என்ற கிருஷ்ணன் சொன்னபடி எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் சாஸ்திரங்களைக் கொண்டு உலகங்களை உஜ்ஜீவிக்கிறான்.

23-76 **உடமைக்கு ஒரு முழுக்கு, உடையவனுக்கு ஒன்பது முழுக்கு என எப்பாடும் பேர்ந்து உதறி**

பகவான் எதற்கு அவதாரங்களை எடுக்கிறான் என்றால் அவன்தான் இந்த சேதநா சேதநங்களுக்கு சொந்தக்காரன். ஒரு பொருள் கிணற்றில் விழ்ந்து விட்டது என்றால் பொருள் விழுவது ஒரு தடவை மட்டுமே. ஆனால் பொருளுக்கு சொந்தக்காரன் அந்த கிணற்றில் குதித்து மூழ்கி, மூழ்கி பல தடவை எழுந்திருந்து அந்த பொருளை மீட்டுவது போலே.

23-77 **ஷாட்குண்ய பர்பூர்ணனாய், அப்ராகிருத திருமேனியாய், காம்பீர்ய ஔதார்யமுடன், அமலனாய் அவதரிப்பது** மூரி நிமிர்ந்து முழங்கி புறப்பட்டு

எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் எல்லா இடங்களிலும் கரந்து எங்கும் பரந்துளன். அவனுடைய அவதார ரஹஸ்யங்கள் என்று கீதையில் சொல்லும்போது (PRINCE - Protect good people, Resurrect vedas, Immmortal, Not fake, Complete with all qualities, Ego) *ஸாதுக்களை ரக்ஷிக்கவும், வேதங்களை நிலை நிறுத்தவும், அப்ராகிருத் திருமேனியுடன், மாய ஜாலங்கள் இல்லாது, எல்லா கல்யாண திருக்குங்களுடன், தன் ஸங்கல்பம் ஒன்றால் மட்டுமே தானே வந்து பிறக்கிறான்.*

23-78 **ஸ்வாபாவிக அநவதிக அதிசய ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய் அவதாரங்கள் தோறும் ப்ரகாசித்தல்** போதருமாப்போலே பூவைப்பூ வண்ணா

எம்பெருமான் திருக்க்ல்யாண குணக்கள் - இயற்கையாவவை, எண்ணற்றவை. ஆச்சரியமானவை. இவை எல்லாம் அவதாரங்கள் தோறும் ப்ரகாசிக்கின்றன.

23-79 எந்நின்ற யோனியுமாய் **எண்ணிலாத அவதாரங்களாய் அருளுவது** உன் கோயில் நின்று இங்கனே போந்து அருளி

பகவான் பல தடவை பிறக்கிறான். பல வகையாகப் பிறக்கிறான். தேவ, திர்யங், மனுஷ்ய, ஸ்தாவர (தேவனாய், மனிதனாய், விலங்கினமாய், தாவரமாய்) என அவன் அவதாரங்கள் பல. பத்து அவதாரங்கள் என்று சொன்னது நம் மனத்தில் நினைப்பதற்கு எளிதாய் இருக்க.

23-80 **சரணாகதனின் பாவங்களை விலக்கி, அநந்த ஆநந்த நித்ய கைங்கர்ய ப்ராப்தியை தருகிறேன் எனும் உன் விரதத்தை சீரிய சிங்காசனத்திலிருந்து அருள்வாய்**

ப்ரபத்தி செய்யும் அடியவனுக்கு அவன் பாவங்களை பொசுக்கி, அவனுக்கு அளவில்லாத, முடிவில்லாத பகவத் கைங்கர்யத்தை கொடுக்கிறேன் என்ற உன் விரதத்தை, அந்த சிம்மாசனத்தில் வீற்றிருந்து நீ அருள் செய்ய வேண்டும்.

23-81 நாரயணனே நமக்கே பறை தருவான் என்றும் உய்யும் ஆறு எண்ணி என்றும் **ப்ரபத்தி ஏற்கனவே ஆனபடியாலே நீயே சிந்தித்து ஸகல மங்களங்களையும் அளிப்பது** யாம் வந்த காரியம் ஆராய்ந்து அருள்

ப்ரபத்தி ஒரு பலனுக்கு ஒரு தடவைதான் செய்ய வேண்டும். ஏற்கனவே உய்யும் ஆறு எண்ணி என்று சொல்லி விட்டதாலே இங்கே மறுபடி சொல்லப் போவதில்லை. நீயே சொன்னதை நினைத்து பார்த்து எமக்கு அருள் செய்ய வேண்டும்.